RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 245 | செப்டம்பர்.6 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## “இபிஎஸ் முதுகில் குத்தியதாக நான் சொல்லவே இல்லை” பிரேமலதா விளக்கம்



சென்னை, செப்.06-

“இபிஎஸ் முதுகில் குத்திவிட்டார் என்று நான் சொன்னதாக மக்களிடையே பரப்பிய அனைத்து ஊடகங்களுக்கும் நான் கண்டனத்தை தெரிவித்து கொள்கிறேன்” என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூரில் நடைபெற்ற தேமுதிக நிர்வாகியின் இல்ல திருமண விழாவுக்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா வருகை தந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: “நான் சொல்லாத விஷயங்களை எல்லாம் நான் சொன்னதாக பத்திரிகையாளர்கள் போடுகிறார்கள். அது கண்டனத்துக்குரியது. அது எனக்கு மிகவும் வருத்தத்தை கொடுத்து விட்டது.

நாங்கள் எதை சொல்கிறோமோ அதை மட்டும் பிரசுரம் செய்யுங்கள். அண்ணன் எடப்பாடியை பற்றி நான் பேசியதாக ஒரு தகவல் செய்திகளில் பரவுகிறது. எங்கள் கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் நாங்கள் கலந்துரையாடினோம். அதில் நிர்வாகிகளின் கேள்விக்கு நான் பதில் கூறினேன். உடனே இபிஎஸ் முதுகில் குத்திவிட்டார் என்று நான் சொன்னதாக மக்களிடையே பரப்பிய அனைத்து ஊடகங்களுக்கும் நான் கண்டனத்தை தெரிவித்து கொள்கிறேன்.

நான் சொல்லாத விஷயத்தை நான் சொன்னதுபோல நீங்கள் சொல்லக் கூடாது. அப்படியான வார்த்தை என் வாயிலிருந்து வரவே வராது. நான் அப்படிப் பேசியதே இல்லை. எங்கள் கட்சி நிர்வாகிகளிடம் நாங்கள் எது வேண்டுமானாலும் ஆலோசனை செய்வோம். அதையெல்லாம் ஊடகங்களிடம் சொல்ல முடியுமா? ஊடகங்களிடம் நான் என்ன பேட்டி கொடுக்கிறேனோ அதைத்தான் நீங்கள் செய்தியாக போட வேண்டும். ஆனால் உங்கள் சுயலாபத்துக்காக மாற்றி மாற்றி திரித்து செய்தி வெளியிட்டால், மேல்மருவத்தூர் அம்மன் முன்னால் கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து இனி என்னிடம் பத்திரிகையாளர் சந்திப்புக்கு வராதீர்கள்” இவ்வாறு பிரேமலதா தெரிவித்தார்.

## 45 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார் குடியரசுத் தலைவர்




புதுடெல்லி: செப்.6-

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, 45 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

முன்னாள் குடியரசு தலைவர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் ஆசிரியர் தினமான இன்று, 45 ஆசிரியர்களுக்கு சேதிய ஆசிரியர் விருதுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கி கவுரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய திரவுபதி முர்மு, "இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மகத்தானது. ஸ்மார்ட் வகுப்பறைகள், நவீன உபகரணங்கள் ஆகியவை வந்துவிட்டாலும், ஸ்மார்ட் ஆசிரியர்கள்தான் கல்வித் தரத்துக்கு முக்கிய காரணி.

மாணவர்களின் வளர்ச்சித் தேவைகளைப் புரிந்து கொள்பவர்கள்தான் புத்திசாலி ஆசிரியர்கள். பசம் மற்றும் உணர்வின் மூலமாக அவர்கள் கற்றலை சுவாரஸ்யமாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள், சமூகம் மற்றம் தேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட நபர்களாக மாணவர்கள் வளர உதவுகிறார்கள்.

பெண் கல்வி நாட்டுக்கு மிக மிக முக்கியம். பெண் கல்வியில் முதலீடு செய்வது ஒட்டுமொத்த நாட்டையும் கட்டியெழுப்புவதற்கான விலைமதிப்பற்ற முதலீடு. பெண்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதுதான், பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான பயனுள்ள வழி.

பின் தங்கிய பின்னணியில் இருந்து வரும் பெண்களுக்கு சிறப்பு கல்வி ஆதரவை வழங்குவதில் தேசிய கல்விக் கொள்கை 2020 முக்கிய பங்கு வகிக்கிறது. கூச்ச சுபாவமுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எந்த ஒரு சீர்திருத்தத்தின் தாக்கமும் இறுதியில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பில்தான் இருக்கிறது.

புதிய கல்விக் கொள்கை இந்தியாவை உலகலாளிய அறிவு வல்லரசாக நிலைநிறத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நமது ஆசிரியர்கள் உலகின் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்கள், பள்ளிக் கல்வி, உயர் கல்வி, திறன் கல்வியில் தீவிர பங்களிப்பை வழங்க வேண்டும். இந்தியா உலகளாவிய அறிவு வல்லரசாக எழுச்சி பெறுவதில் நமது ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.” என தெரிவித்தார்.

## பயண ஆவணங்கள் இல்லாத இலங்கை தமிழர்களுக்கு தண்டனையில் இருந்து விலக்கு: உள்துறைக்கு அண்ணாமலை நன்றி



சென்னை, செப்.06-

இலங்கை தமிழர்களிடம் பயண ஆவணங்கள் இல்லை என்றால் தண்டனையில் இருந்து கருணை அடிப்படையில் விலக்கு அளிக்கப்படும் என்ற மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவிப்புக்கு தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை நன்றி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது: கடந்த 2015 ஜனவரி 9ம் தேதிக்கு முன்பாக, இலங்கையில் நீண்டகாலமாக நடைபெற்ற உள்நாட்டு போரில் இருந்து தப்பித்து, நமது நாட்டில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்களிடம், செல்லுபடியாகும் பாஸ்போர்ட், விசா உள்ளிட்ட பயண ஆவணங்கள் இல்லை என்றால், நமது நாட்டு சட்டப்படி, அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையில் இருந்து, கருணை அடிப்படையில் விலக்கு அளிக்க ப்படும் என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. குடியுரிமைக்கான முதல்படி: நமது நாட்டுக்கு அடைக்கலம் தேடி வந்த இலங்கைத் தமிழர்களின் நீண்டகால கோரிக்கையான, இந்தியக் குடியுரிமை பெறுவதற்கான முதல்படியாக இது அமைந்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. தமிழ் மக்களின் மீதான அக்கறையின் வெளிப்பாடாக அமைந்துள்ள இந்த அறிவிப்பை வழங்கிய, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிரதமர் மோடிக்கும் இலங்கைத் தமிழர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அதிமுக ஆட்சி தொடர்ந்திருந்தால் பெரியாறு அணை நீர்மட்டம் உயர்த்தப்பட்டிருக்கும்: ஆண்டிபட்டியில் இபிஎஸ் பேச்சு



ஆண்டிபட்டி, செப்.06-

அதிமுக ஆட்சி தொடர்ந்திருந்தால் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்தப்பட்டு 5 மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பும், கனவும் நிறைவேறி இருக்கும் என்று ஆண்டிபட்டியில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

”மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்பதை வலியுறுத்தி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மாநிலம் முழுவதும் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நேற்று இரவு (செப்.4) பிரச்சாரம் செய்து அவர் பேசியதாவது: ”இங்கு கூடியுள்ள தொண்டர்கள் கூட்டம் வரும் தேர்தலில் அதிமுக வெற்றியை உறுதிப்படுத்தி உள்ளது. ஆண்டிபட்டி தொகுதிக்கு என்று தனி வரலாறு இருக்கிறது. எம்ஜிஆர், ஜெயலலிதா என்று அரசியல் வரலாற்றிலேயே இரண்டு முதல்வர்களை தந்த தொகுதி இது.

ஆண்டிபட்டி அதிமுகவின் எஃகு கோட்டை. எத்தனை கட்சிகளுடன் திமுக கூட்டணி வைத்தாலும் வரும் தேர்தலில் வெற்றி பெற முடியாது. திமுக ஆட்சிக்கு வந்து 51 மாதம் முடிந்து விட்டது. இந்த ஆட்சியில் ஆண்டிபட்டி தொகுதிக்கு எந்த திட்டத்தையும் கொண்டு வரவில்லை.

5 மாவட்டங்களின் நீராதாரமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்டப் போராட்டம் நடத்தினார். இதனடிப்படையில் அணையை பலப்படுத்திவிட்டு 142 அடி உயர்த்திக் கொள்ளலாம் என்ற தீர்ப்பு கிடைத்தது.

நான் முதல்வராக இருந்தது போது பேபி அணையைப் பலப்படுத்த ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் தொடங்கின. கேரள முதல்வரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது. ஆட்சி தொடர்ந்திருந்தால் நீர்மட்டம் உயர்த்தப்பட்டு 5 மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பும், கனவும் நிறைவேறி இருக்கும்.

ஆனால் ஆட்சிக்கு வந்த திமுக நீர்மட்டத்தை உயர்த்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்தியா கூட்டணியில் தானே கம்யூனிஸ்ட் கட்சியும் திமுகவும் உள்ளது. ஏன் இது குறித்து திமுக, கேரள அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அவர் நினைத்தால் கேரள அரசுடன் பேசி எளிதில் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால் ஸ்டாலின் தனது குடும்பம், அதிகாரம் ஆகியவற்றுக்காகவே கூட்டணியில் இருந்து வருகிறார். அதனால் பெரியாறு அணை விஷயத்தில் அவர் அக்கறை காட்டுவதில்லை.

அதிமுக ஆட்சியில் விவசாயிகளின் பங்கேற்புடன் குடிமராமத்துப் பணி, மும்முனை மின்சாரம், சொட்டு நீர் மானியம், இலவச ஆடு, மாடு, கோழி, மடிக் கணினி என்று ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினோம்.

அதிமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் தொழில் வளம் பெருக நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் மினி கிளினிக்குகள் திறக்கப்படும். திமுக ஆட்சியில் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்து விட்டது. ஆரம்பத்திலேயே இதை சட்டமன்றத்தில் கூறினேன். ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தமிழக இளைஞர்கள் கஞ்சாவுக்கு அடிமையாகி சமுதாயத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சிறுமி முதல் மூதாட்டி வரை பாதுகாப்பு இல்லாமல் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. காவல்துறைகளின் கைகள் கட்டப்பட்டுள்ளன.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இந்நிலை அனைத்தும் மாறும். பெட்ரோல் விலை குறையவில்லை. மாதம் ஒரு முறை மின் அளவீடு, கல்விக் கடன் ரத்து உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஆனால் 98 சதவீதம் தேர்தல் வாகுறுதிகளை நிறைவேற்றியதாக பொய் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

ஆண்டிபட்டி ஒன்றியப் பகுதிகளுக்கு முல்லை பெரியாற்றில் இருந்து நீர் கொண்டு வரப்படும். வைகை அணை தூர்வாரப்பட்டு நீரை அதிகளவில் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும். நெசவாளர்களுக்கு இலவச வீடு உள்ளட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும். என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், தேனி கிழக்கு மாவட்டச் செயலாளர் முருக்கோடை ராமர், கிழக்கு, மேற்கு ஒன்றியச் செயலாளர்கள் வரத ராஜன், லோகிராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒற்றை அடுக்கு ஜிஎஸ்டியை நோக்கி பயணிப்பது தான் நமது இலக்கு: அன்புமணி கோரிக்கை



சென்னை, செப்.06-

ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும். ஒற்றை அடுக்கை நோக்கி பயணிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘ஜிஎஸ்டி கவுன்சிலால் தீர்மானிக்கப்பட்டு, மத்திய அரசால் வரும் 22ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஜிஎஸ்டி வரி சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை. அடித்தட்டு மக்கள் முதல் அரசு வரை அனைத்துத் தரப்பினருக்கும் இந்த சீர்திருத்தங்கள் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. இது வரை நான்கு அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி வரி விகிதங்கள், 40% வரிப் பிரிவு இல்லாமல் 5%, 18% என இரட்டை அடுக்குகளாக குறைக்கப்பட்டுள்ளன. இதனால் மின்னணு பொருள்கள், செல்பேசிகள், வாகனங்கள், காப்பீடுகள் ஆகியவற்றின் வரி குறைக்கப்படவுள்ளன.

இதனால், அரசுகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்பதைப் போல தோன்றினாலும், வணிகம் அதிகரித்து அதிக எண்ணிக்கையில் ஒவ்வொரு பொருளும் விற்பனை செய்யப்படும் போது மிகக் குறுகிய காலத்தில் அந்த வருவாய் இழப்பு ஈடு செய்யப்படும். அதுமட்டுமின்றி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு பெருக்கம் ஆகியவற்றுக்கும் இந்த சீர்திருத்தம் வகை செய்யும்.

உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் நொறுக்குத் தீனிகள், குளிர்பானங்கள் போன்றவற்றின் மீதான வரி 40% அதிகரிக்கப் பட்டிருப்பது மிகவும் சரியானது. அதேநேரத்தில் பீடியின் மீதான வரி 28 விழுக்காட்டில் இருந்து 40% ஆக அதிகரிக்கப்படுவதற்கு பதிலாக 18% ஆக குறைக்கப் பட்டிருப்பது, பரோட்டா போன்ற உடலுக்கு கேடு விளைவிக்கும் உணவு வகைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், இட்லி, தோசை போன்றவற்றுக்கு 5% வரி விதிக்கப்படுவது போன்ற திருத்தப்பட வேண்டிய குறைகளும் உள்ளன. அவை சரி செய்யப்பட வேண்டும்.

சிங்கப்பூரில் உள்ளது போன்ற ஒற்றை அடுக்கு ஜி.எஸ்.டியை நோக்கி பயணிப்பது தான் நமது இலக்காக இருக்க வேண்டும்; அதேபோல், பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களும் ஜி.எஸ்.டி வரிவிதிப்பு வரம்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்

## ஏழைகள் அனைவருக்கும் ரூ.25 லட்சம் வரை மருத்துவ காப்பீடு: ஆந்திர அமைச்சரவையில் தீர்மானம்

அமராவதி, செப்.06-

யூனிவர்ஸல் ஹெல்த் பாலிசிக்கு ஆந்திர அரசு நேற்று அனுமதி வழங்கியது. இதனால் இனி ஆந்திர மாநிலத்தில் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள 1.63 கோடி குடும்பத்தினர் ஆண்டுக்கு ரூ.25 லட்சம் வரை இலவச மருத்துவ காப்பீடு பெறலாம். ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு தலைமையில் அமைச்சரவை கூட்டம் அமராவதியில் நேற்று நடைபெற்றது. இதில் பல முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அதில் குறிப்பாக, ஆந்திராவில் யூனிவர்ஸல் ஹெல்த் பாலிசிக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் மற்றும் சந்திரபாபு நாயுடுவின் மனைவியான புவனேஸ்வரி நடத்தும் என்டிஆர் அறக்கட்டளை இணைந்து இத்திட்டத்தில் பணியாற்றும். இதன்படி, இனி ஆந்திராவில் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள 1.63 கோடி குடும்பத்தாருக்கு ஆண்டுக்கு ரூ.25 லட்சம் வரை மருத்துவ காப்பீடு கிடைக்கும்.

இதனால் அந்த குடும்பத்தில் உள்ளவர்கள் ஆண்டுக்கு ரூ.25 லட்சம் வரை எந்தவொரு கார்பரேட் மருத்துவமனைகளிலும் சிகிச்சை, அல்லது அறுவை சிகிச்சையோ இலவசமாக பெறலாம். அதாவது 1.63 கோடி குடும்பத்தாருக்கு ஆந்திராவில் இனி இலவச மருத்துவ சிகிச்சை என்றே கூறலாம். ஆந்திராவில் 2,493 மருத்துவமனைகளில் இந்த திட்டம் அமல்படுத்தப்படும் என அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் இதில் 3,257 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. மேலும், 2.5 லட்சம் வரை மருத்துவ சிகிச்சைக்கு செலவானால் அது காப்பீடு நிறுவனங்கள் ஏற்கவேண்டும். அதற்கும் மேல், அதாவது ரூ.25 லட்சம் வரை செலவானால் அதனை என்டிஆர் அறக்கட்டளை ஏற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆந்திராவில் மதனபல்லி, ஆதோனி, மார்க்காபுரம், புலிவேந்துலா, பெனுகொண்டா, பாலகொல்லு, அமலாபுரம், நர்ஸிபட்டனம், பாபட்லா, பார்வதி புரம் ஆகிய 10 ஊர்களில் புதிதாக அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பழனியில் வ உ சி153 வது பிறந்தநாள் முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் கல்வி விருதுகள் வழங்கும் விழா

திண்டுக்கல், செப்.06-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கந்த விலாஸ் பாஸ்கரன் லைன்ஸ் அசோக் குமார் தலைமையில் வ உ சி153வது பிறந்தநாளை முன்னிட்டு வ உ சி மன்றம் மற்றும் சோழிய வேளாளர் ஆகியோர் இணைந்து திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அதனைத் தொடர்ந்து தனியார் மண்டபத்தில் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பு மாவட்ட அளவில் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு கல்வி விருதுகள் ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டனர் இந்நிகழ்வில் நிர்வாகிகள் வ உ சி வாழ்க்கை வரலாறை சிறப்புரையாற்றினர் சுதேசி கொள்கையில் உறுதியாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு முக்கிய ஊக்கமாக இருந்த அவரின் வாழ்க்கைப் பயணத்தை வ.உ.சி. என்றழைக்கப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை, 1872 ம் ஆண்டு செப்டம்பர் 5ம் தேதி பிரிட்டிஷ் இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவர் 1895ம் ஆண்டு வள்ளி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார் ஆறு வயதில் வீரப் பெருமாள் அண்ணாவி என்ற தமிழாசிரியரிடம் தமிழ் கற்றுக் கொண்டார். அரசாங்க அலுவலரான கிருஷ்ணன் வ.உ.சி.க்கு ஆங்கிலம் கற்பித்தார். பதினான்கு வயதில் திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார். கணபதி ஐயர், அரிகரன் ஆகியோர் அவருக்கு சட்டம் கற்பித்தனர் வ.உ.சிதம்பரம்பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர் எனும் பன்முகத் தன்மை பெற்றிருந்தார். இவரது அரசியல் வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கமும், நேர்மையும், ஆற்றலும் நிறைந்ததாக இருந்தது. இவர் அன்பு, தைரியம், வெளிப்படையான குணம் இவற்றை உடையவராக இருந்தார் என கூறினர் இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம், தமிழ்நாடு ஹவுசிங் போர்டு வாளகம் "உங்களுடன் ஸ்டாலின் முகா'ம்"

சோழிங்கநல்லூர், செப்.06-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியம் இடம் : பெரும்பாக்கம்,தமிழ்நாடு ஹவுசிங் போர்டு வாளகம் ( செப்டம்பர் : 03) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டா லின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், சுகாசினி ரங்கராஜன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.



உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம் .எல்.ஏ,

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை வாங்கி துறை சார்ந்த அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர் .முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டியை எம்.எல்.ஏ வழங்கினார். உடன் புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. இ.பாண் டியன், செயலாளர், எ. முகமது கனி, பெரும்பாக்கம் ஊராட்சி செயலர், நாராயணன், வி.ஏ.ஓ.வெங்கடேசன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொது மக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை தொடர்பாக,

# 160 முன்களப்பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்பு பணிக்கென கையடக்க கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி முன்களப்பணியாளர்களுக்கு வழங்கினார்

சிவகங்கை, செப்.06-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சுவஸ்திக் தொண்டு நிறுவனம் மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை தொடர்பாக, முன்களப்பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்பு பணிக்கென கையடக்க கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் முன்களப்பணியாளர்களுக்கு வழங்கி தெரிவிக்கையில்,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதில், குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, மாற்றுத்திறன் கொண்டவர்களின் மறுவாழ்விற்கென எண்ணற்ற திட்டங்களை வழங்கி, அவர்களின் நலன் காத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டுக்காக அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத்திட்டங்கள் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில், உலக வங்கி நிதிவுதவியுடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் இல்லம்தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளையும் கண்டறிந்து, அவர்களது முழு விவரங்கள் அடங்கிய சமூக தரவுத்தளத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அக்கணக்கெடுப்பு பணியானது கடந்த ஜூலை 10 முதல் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இப்பணியானது, மாவட்டத்தின் அனைத்து கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி பகுதிகளில், சுவஸ்திக் தொண்டு நிறுவன முன்களப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணிகள் முன்களப்பணியாளர்கள் வாயிலாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. அக்கணக்கெடுப்பு பணியினை முழுமையாக முடிப்பதற்கு ஏதுவாக, கையடக்க கணினிகள் வழங்கிடும் பொருட்டு, இன்றையதினம் 160 முன்களப் பணியாளர்களுக்கு கையடக்க கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியில் ஈடுபட்டுள்ள முன்களப்பணியாளர்கள் தங்களது பணிகளை திறன்பட மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும், இக்கணக்கெடுப்பு பணியினை மேற்கொண்டு வரும் முன்களப்பணியாளர்கள் தங்களது வீடுகளுக்கு வரும்போது, அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, உரிய விபரங்களை வழங்குதல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், மாவட்ட திட்ட அலுவலர் (தமிழ்நாடு உரிமைகள் திட்டம்) திரு.அழகுமன்னன், சுஸ்வதிக் தொண்டு நிறுவன செயலாளர் திரு.தமிழ்துரை, திறன் மேம்பாட்டு நிபுனர் திரு.ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அணை 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றம் நிறுத்தம்

மேட்டூர் / தருமபுரி, செப்.06-

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததால் மேட்டூர் அணை நடப்பாண்டில் முழு கொள்ளளவான 120 அடியை கடந்த 2ம் தேதி 6வது முறையாக எட்டியது. அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வரும் நீர் முழுவதும் காவிரியில் வெளியேற்றப்பட்டு வந்தது.

அணைக்கு நேற்று முன்தினம் இரவு விநாடிக்கு 29,300 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 23,300 கனஅடியாக குறைந்தது. இதையடுத்து, கடந்த 2 நாட்களுக்கு பிறகு 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப்படுவது நேற்று காலை 8 மணி முதல் நிறுத்தப்பட்டது. அதேநேரத்தில், அணையின் நீர்மின் நிலையங்கள் வழியாக காவிரி டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 22,500 கனஅடியும், கால்வாய் பாசனத்துக்கு விநாடிக்கு 800 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணை நீர்மட்டம் நேற்று 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் இருந்தது. இதனிடையே, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 24 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று 18 ஆயிரம் கனஅடியாக குறைந்தது.

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் 2 சக்திவாய்ந்த நிலநடுக்கம்: அதிர்ச்சியில் மக்கள்

காபூல், செப்.06-

கடந்த 12 மணி நேரத்தில் கிழக்கு ஆப்கானிஸ்தானில் இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக ஜெர்மனி புவி அறிவியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. நான்கு நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஆப்கானிஸ்தானில் 2,200 பேர் உயிரிழந்தனர். கிழக்கு ஆப்கானிஸ்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 6.0 ரிக்டர் அளவிலான கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜலாலாபாத் அருகில் பூமியில் 8 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் குனார் மற்றும் நங்கர்ஹார் மாகாணம் மிக கடுமையாக பாதிக்கப்பட்டது. வியாழக்கிழமை (செப்டம்பர் 4) நிலவரப்படி இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 2,205 ஆகவும், காயமடைந்தோர் எண்ணிக்கை 3,640 ஆகவும் உள்ளதாக தலிபான் நிர்வாகம் அறிவித்தது. இந்த நிலையில், வியாழக்கிழமை இரவு ஆப்கானிஸ்தானின் காபூலில் இருந்து 160 கிமீ தூரத்தில் 5.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து அடுத்த ஒரு மணி நேரத்தில், வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 5) தென்கிழக்கில் 10 கிமீ ஆழத்தில் 5.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.



## கண்டாங்கிபட்டி குரூப், சானிப்பட்டி கிராம பகுதியில்

# கொத்தடிமை மறுவாழ்வு நிதியிலிருந்து மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ரூபாய் 90,000 மதிப்பீட்டிலான நிவாரணத் தொகை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வழங்கப்பட்டது

விவகங்கை, செப்.06-

சிவகங்கை மாவட்டம், கண்டாங்கிபட்டி குரூப், சானிப்பட்டி கிராம பகுதியில், ஆடுமேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த 2 கொத்தடிமைத் தொழிலாளர்களும், 1 கொத்தடிமை குழந்தை தொழிலாளரும் மீட்கப்பட்டு, கொத்தடிமை மறுவாழ்வு நிதியிலிருந்து மொத்தம் ரூபாய் 90,000 மதிப்பீட்டிலான நிவாரணத் தொகை, மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, அவர்களால் வழங்கப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பாக இண்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிசன் (I.J.M)க்கு பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலர் / சார்பு நீதிபதி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), சிவகங்கை வருவாய் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், திருப்பத்தூர் தொழிலாளர் உதவி ஆய்வாளர், தமறாக்கி உள்வட்ட வருவாய் ஆய்வாளர், கண்டாங்கிபட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கண்டாங்கிபட்டி குரூப் கிராம உதவியாளர், இண்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிசன் அட்வகேட், ஐ,ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவன இயக்குநர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலக மேற்பார்வையாளர்,

சிவகங்கை தாலுகா காவல் நிலைய காவலர் ஆகியோர் அடங்கிய மாவட்ட கொத்தடிமைத் தொழிலாளர் முறை எதிர்ப்புக் குழுவினர் (District Task Force) கடந்த 28.08.2025 அன்று சிவகங்கை வட்டம், கண்டாங்கிப்பட்டி குரூப், சாணிப்பட்டி கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வில் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகா, ஆவுடையான் கோட்டை கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் நீலகண்டன் (வயது 31), அவரது மனைவி முனியம்மாள் (வயது 29) மற்றும் அவரது மகன் சபரிவாசன் (வயது 11) ஆகியோர், சிவகங்கை மாவட்டம், தமறாக்கி உள்வட்டம், கண்டாங்கிபட்டி குரூப், சானிப்பட்டி கிராமம், அய்யனார் கோவில் அருகே ஆடுகள் மேய்த்துகொண்டிருந்தது கண்டறியப்பட்டு, மீட்கப்பட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் விடுதலைச் சான்று வழங்கப்பட்டது.

அவ்வாறாக, மீட்கப்பட்ட 3 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு, கொத்தடிமை மறுவாழ்வு நிதியிலிருந்து தலா ரூ.30,000/ வீதம் மொத்தம் ரூ.90,000/ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட நீலகண்டன் மற்றும் முனியம்மாள் ஆகிய இருவரையும் ஆடுமேய்க்கும் தொழிலில் கொத்தடிமைத் தொழிலாளர்களாகவும், சபரிவாசன் (வயது11) என்ற சிறுவனை ஆடுமேய்க்கும் தொழிலில் கொத்தடிமை குழந்தைத் தொழிலாளராக பணியில் வைத்திருந்த சிவகங்கை வட்டம், தமறாக்கி உள்வட்டம், கண்டாங்கிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு.தேவராஜன் த/பெ முத்து என்பவர் மீது கொத்தடிமைத் தொழிலாளர் (ஒழிப்பு) சட்டம் மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் சட்டங்களின் கீழ் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திரு. சதீஷ்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய இருவார கண்தான விழாவை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மனித சங்கிலி, விழிப்புணர்வு கையெழுத்து இயக்க நிகழ்வுகளை துவக்கி வைத்தார்

சிவகங்கை, செப்.06-

சிவகங்கை மாவட்டம், தேசிய இருவார கண்தான விழாவை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மனித சங்கிலி, விழிப்புணர்வு கையெழுத்து இயக்க நிகழ்வுகளை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் உடல் நலத்தை பேணிக்காத்திடும் பொருட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் வழங்கி வருகிறார்கள். அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளை பொதுமக்கள் பெறுவதற்கு ஏதுவாக, பல்வேறு விழிப்புணர்வு முகாம்களும் தொடர்ந்து நடத்தப்பட்டு, அதன் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

கண் தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட தேசிய கண் தான வார விழாவானது, ஆண்டுதோறும் ஆகஸ்ட்25 முதல் செப்டம்பர்8 வரை கடைப்பிடிக்கப்படுகிறது. முதன்முதலில் 1948ஆம் ஆண்டு மருத்துவர் முத்தையா என்பவர் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை (Corneal Transplantaion) செய்தார்.

மேலும், இவ்விழாவின் முக்கிய நோக்கமானது, பொதுமக்களுக்கு கண் தானத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் மற்றும் இறப்பிற்குப் பிறகு கண்களை தானம் செய்வதாக உறுதிமொழி எடுக்க அவர்களை ஊக்குவித்தல் போன்றவைகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே ஆகும்.

நமது சிவகங்கை மாவட்டத்தில் தேசிய இருவார கண்தான விழாவை முன்னிட்டு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்றையதினம் மருத்துவக்கல்லூரி மாணாக்கர்களைக் கொண்டு, நடத்தப்பட்ட மனித சங்கிலி மற்றும் விழிப்பு ணர்வு கையெழுத்து இயக்கம், செல்ஃபி பாயின்ட் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுகிறது.

இதேபோன்று, மாணாக்கர்களிடையே கண்தான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்லோகன் போட்டிகள் மற்றும் கண்தான விழிப்புணர்வு குறித்த சுவரொட்டி தயாரித்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளது. பொதும க்கள் அதிகம் கூடும் இடங்களில் மாணா க்கர்கள் வாயிலாக கண்தானம் குறித்து எடுத்துரைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், இந்நிகழ்ச்சியின் வாயிலாக கண்தானம் செய்தவரின் குடும்பத்தினரை கௌரவித்திடும் வகையில், பாராட்டுச் சான்றிதழ் வழங்கி பொன்னாடை அணிவிக்கப்பட்டுள்ளது. நாம் மறைந்த பின்னரும் இவ்வுலகில் வாழ்வதற்கு அடிப்படையாக விளங்கி வரும் கண்தானத்தினை ஊக்குவித்திடும் வகையிலும் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ளும் வகையிலும், இதுபோன்று விழிப்புணர்வு நிகழ்வுகள் அரசால் நடத்தப்படுகிறது. மேலும், கண்தானம் செய்திட 1800 425 1465 கட்டணமில்லா தொலைபேசி எண்ணும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, கடந்த நான்காண்டுகளில் சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் வாயிலாக மொத்தம் 221 நபர்கள் கண்தானம் செய்துள்ளது குறிப்பிதக்கதாகும்.

இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட்டு கண்தான த்தினை ஊக்குவித்தல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்தார்.

# சென்னை கோட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மின்சார ரயில்களில் டிக்கெட் இன்றி பயணித்தவர்களிடம் இருந்து ரூ.8 கோடி அபராதம் வசூல்

சென்னை, செப்.06-

சென்னை கோட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மின்சார ரயில்களில் டிக்கெட் எடுக்காமல் பயணம் செய்தவர்களிடம் இருந்து ரூ.8 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை இணைக்கும் மின்சார ரயிலில் தினசரி லட்சக்கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். காலை மற்றும் மாலை நேரங்களில் ரயில்களில் உள்ள கூட்ட நெரிசலை பயன்படுத்தி, பலர் டிக்கெட் எடுக்காமல், பயணம் செய்வதாக புகார்கள் எழுந்தன. இது தொடர்பாக டிக்கெட் பரிசோதகர்கள் நடத்திய சோதனைகளில் சென்னை கோட்டத்தில், நடப்பாண்டில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் மின்சார ரயில்களில் டிக்கெட் எடுக்காமல், பயணம் செய்த 30,000த்திற்கும் மேற்பட்டோர் பிடிபட்டுள்ளனர்.

அவர்களிடம் ரூ.8.14 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இருந்த இடத்தில் இருந்தே டிக்கெட் எடுப்ப தற்காக இணையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதாகவும் அவற்றையும் மீறி டிக்கெட் இன்றி பயணிப்போருக்கு அபராதம் மற்றும் சிறை உள்ளிட்ட தண் டனைகள் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் எச்சரித்தனர்.




## 'குமார சம்பவம்' ஒரு போராளி பற்றிய கதை: இயக்குநர் விளக்கம்

'பாண்டியன் ஸ்டோர்ஸ்' தொடர் மூலம் பிரபலமானவர் குமரன் தங்கராஜன். இவர் நாயகனாக நடித்திருக்கும் படம், 'குமார சம்பவம்'. நடிகரும் இயக்குநருமான பாலாஜி வேணுகோபால் இயக்கியுள்ளார். இதில் பாயல் ராதாகிருஷ்ணா,ஜி.எம்.குமார், குமரவேல், பால சரவணன், வினோத்சாகர், லிவிங்ஸ்டன், சிவா அரவிந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜெகதீஷ் சுந்தரமூர்த்திஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தப்படத்துக்கு அச்சு ராஜாமணி இசையமைத்துள்ளார். வீனஸ் இன்ஃபோடெய்ன்மென்ட் சார்பில் கே.ஜி.கணேஷ்தயாரித்துள்ளார். செப்.12ல் வெளியாகும் இந்தப் படத்தின் முன்னோட்டம் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

இயக்குநர் பாலாஜி வேணுகோபால் பேசும்போது, "இது ஒரு போராளி பற்றிய கதை. ஆனால் அவனது போராட்டத்தைப் பற்றிய கதை அல்ல. இது ஒரு திரைப்பட இயக்குநரின் கதை. ஆனால், அவர் படம் எடுத்த கதை அல்ல. இதில் இடம்பெறும் பாடல்கள் மட்டுமல்ல, அனைத்து எழுத்து வடிவங்களையும் நான் மட்டுமே உருவாக்கினேன். இது பேராசைதான். ஆனால் இதன் பின்னணியில் ரசிகர்களுக்குத் தரமான பொழுதுபோக்கை வழங்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருந்தது. இந்தப் படத்தின் நாயகன் குமரன் திறமைசாலி. அவருக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது'' என்றார்.



## இயக்குநராக அறிமுகமாகும் ஒளிப்பதிவாளர் கணேஷ் சந்திரா

விஜய் ஆண்டனி நடித்த 'சலீம்' படம் மூலம் ஒளிப்பதிவாளர் ஆனவர் கணேஷ் சந்திரா. தொடர்ந்து 'ஜெயில்', 'காரி', தெலுங்கு படமான 'மிஸ் மேட்ச்' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த அவர், இப்போது இயக்குநராக அறிமுகமாகிறார். அவர் ஒளிப்பதிவு செய்து இயக்கும் படத்துக்கு 'பூக்கி' என்று தலைப்பு வைத்துள்ளனர். இதில், அஜய் திஷன் ஹீரோவாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக தனுஷா நடிக்கிறார். பாண்டியராஜன், சுனில், இந்துமதி மணிகண்டன், விவேக் பிரசன்னா, பிளாக் பாண்டி, ஆதித்யா கதிர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ரொமான்ஸ் காமெடி கதையாக உருவாகும் இப்படத்தை, விஜய் ஆண்டனி பிலிம் கார்ப்பரேஷன் சார்பில் ஃபாத்திமா விஜய் ஆண்டனி தயாரிக்கிறார். இதன் தொடக்க விழா சென்னையில் நடந்தது. படம் பற்றி இயக்குநர் கணேஷ் சந்திரா கூறும்போது, "இன்றைய தலைமுறையினரின் காதலுக்கு அவர்களே பிரச்சினையாக இருக்கிறார்கள். அப்படியான காதலர்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து ரொமான்டிக் காமெடி படமாக இது உருவாகிறது'' என்றார். விஜய் ஆண்டனி இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு சென்னை மற்றும் பெங்களூரில் ஒரே கட்டமாக நடக்கிறது.



## திருமணத்துக்கு பிறகு கவர்ச்சி காட்டுவதில் தவறு கிடையாது ரகுல் பிரீத் சிங்

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையான ரகுல் பிரீத் சிங், இந்தி நடிகர் ஜாக்கி பக்னானியைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்கு பிறகும் படங்கள் நடித்து வரும் ரகுல் பிரீத் சிங். கவர்ச்சியிலும் கவனம் ஈர்த்து வருகிறார்.

இதுகுறித்து அவரிடம் கேட்டபோது. "திருமணம் நடிகைகளின் வளர்ச்சிக்கோ. முன்னேற்றத்துக்கோ தடை போடாது. திருமணத்துக்கு பிறகு கவர்ச்சி காட்டுவதில் தவறு கிடையாது.

இன்னும் சொல்லப்போனால், திருமணத்துக்கு பிறகு தான் எனது அழகும், கவர்ச்சியும் கூடியிருப்பதாக உணருகிறேன். கவர்ச்சியை ரசிப்பதில் தவறே கிடையாது. வாழ்க்கையை அனுபவித்து வாழவேண்டும்" என்று சிரிப்புடன் பதில் அளிக்கிறார் ரகுல் பிரீத் சிங்.

## பல படங்களில் பெண்களை பாலியல் பொருளாக தான் காண்பிக்கிறார்கள்: 'பேட் கேர்ள்' இயக்குநர் வர்ஷா



பல படங்களில் பெண்களை பாலியல் பொருளாக தான் காண்பிக்கிறார்கள் என்று 'பேட் கேர்ள்' இயக்குநர் வர்ஷா தெரிவித்துள்ளார்.

வெற்றிமாறன் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'பேட் கேர்ள்'. செப்டம்பர் 5ம் தேதி வெளியாகவுள்ள இப்படத்தினை வர்ஷா இயக்கியுள்ளார். இப்படத்தின் டீஸருக்கு இணையத்தில் பெரும் எதிர்ப்பு உருவானது. அனைத்து பிரச்சினைகளையும் கடந்து, தற்போது வெளியாகவுள்ளது.

'பேட் கேர்ள்' குறித்து வர்ஷா, "இந்தப் படம் பல நாடுகளில் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. 13 நாடுகளின் விழாக்களுக்கு பங்கேற்று வந்திருக்கிறேன். 'பேட் கேர்ள்' படக் குழுவினர் அனைவருக்கும் நன்றி முக்கியமாக இந்த வாய்ப்பு கொடுத்த வெற்றிமாறன் சாருக்கு மிக்க நன்றி. வெளிநாடுகளில் திரையிடப்பட்டபோது அனைவரும் அங்கு கொண்டாடினார்கள். அதே நேரத்தில் இங்கு குப்பை படம் என்று கூறினார்கள். பல நாடுகளில் எழுந்து நின்று கைதட்டி மரியாதை கொடுத்தார்கள். பல நாடுகளில் சுற்றி இப்படம் பிறந்த வீட்டிற்கு வந்திருக்கிறது.

இப்படம் பிடிக்கவில்லை என்றால், அனைவருக்கும் அவரவருடைய வாழ்க்கையை வாழ்வதற்கும் முடிவெடுப்பதற்கும் உரிமை இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளுங்கள். பல படங்களில் பெண்களை பாலியல் பொருளாக தான் காண்பிக்கிறார்கள். அதுவரை பிரச்சினை இல்லை ஆனால் பெண்கள் தங்களுக்கு என்று ஆசை விருப்பம் என்று கூறும்போது தான் பிரச்சினையாக மாறுகிறது.

பாலியல் உறவு ரீதியாக பேசக்கூடாது என்பதை விட எப்படிப் பேச வேண்டும் என்பது இருக்கிறது. இப்படி வெளிப்படையாக பேசினால் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்குமா என்று யோசிக்காதீர்கள். உரையாடல் தான் மிகவும் உதவியாக இருக்கும். பெண்கள் கலாச்சாரத்தை சீரழிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். பெண்களா கலாச்சாரத்தை பாதுகாக்க வேண்டும்?. கலாச்சாரம் தானே பெண்களை பாதுகாக்க வேண்டும்.

சம்பந்தமே இல்லாமல் நானும், அஞ்சலியும் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு சென்றோம். எங்கள் படத்திற்கு நல்ல வரவேற்பு கொடுத்தார்கள். ராட்டடோம்ல் ராம் சாருடைய படத்தை திரையிடும்போது எங்களை அழைத்து பேசிக் கொண்டிருப்பார். எங்களுக்கு மிகுந்த ஆதரவு கொடுத்தார்.

வெற்றிமாறன் சாரிடம் பணியாற்றும் போது மிகவும் கடினமாக இருக்கும். இந்த கேமராவை ஏன் இங்கே வைத்தீர்கள்? இதுபோன்று ஏதாவது கேட்டுக் கொண்டே இருப்பார். நாங்கள் அவ்வப்போது நம்பிக்கை இழந்து விடுவோம். ஆனால், அனுராக் சார் தான் இழந்த நம்பிக்கையை மீட்டுத் தருவார்.

வெற்றிமாறன் சாரிடம் கதை எழுதக் கற்றுக் கொண்டேன். தனுஷ் சாரிடம் எப்படி முடிப்பது என்பதை கற்றுக்கொண்டேன்'' என்று தெரிவித்துள்ளார் வர்ஷா



## புச்சிபாபு கிரிக்கெட் தொடர்: இறுதிப் போட்டிக்கு டிஎன்சிஏ முன்னேற்றம்


புச்சிபாபு கிரிக்கெட் தொடரின் டிஎன்சிஏ பிரெஸிடெண்ட் லெவன் ஜம்மு - காஷ்மீர் அணிகள் இடையிலான அரை இறுதி ஆட்டம் சென்னையில் உள்ள சிஎஸ்கே உயர் செயல் திறன் மையத்தில் நடைபெற்று வந்தது.

இதில் டிஎன்சிஏ பிரெஸிடெண்ட் லெவன் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 567 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இதையடுத்து விளையாடிய ஜம்மு - காஷ்மீர் அணி 3வது நாள் ஆட்டத்தின் முடிவில் 65 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 212 ரன்கள் எடுத்தது.

நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய ஜம்மு - காஷ்மீர் அணி 74 ஓவர்களில் 230 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக யாவர் ஹசன் 84 ரன்கள் சேர்த்தார். டிஎன்சிஏ பிரெஸிடெண்ட் லெவன் சார்பில் வித்யுத் 7 விக்கெட்களையும், ஹெம் சுதேஷன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். முதல் இன்னிங்ஸில் 337 ரன்கள் முன்னிலை பெற்ற டிஎன்சிஏ பிரெஸிடெண்ட் லெவன் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஆட்ட நாயகனாக வித்யுத் தேர்வானார்.

குருநானக் கல்லூரியில் நடைபெற்ற மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் ஹரியானா ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் ஹைதராபாத் அணி 90 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. 272 ரன்கள் இலக்கை துரத்திய ஹரியானா அணி நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 62.4 ஓவர்களில் 181 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. ஹரியானா அணி சார்பில் நித்தின் சாய் யாதவ் 7 விக்கெட்கள் வீழ்த்தினார். வரும் 6ம் தேதி நடைபெறும் இறுதிப் போட்டியில் டிஎன்சிஏ பிரெஸிடெண்ட் லெவன் ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

## முத்தரப்பு டி 20 தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தியது ஆப்கானிஸ்தான்




முத்தரப்பு டி 20 கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணியை 18 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஆப்கானிஸ்தான் அணி.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் முத்தரப்பு டி 20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான் 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 169 ரன்கள் எடுத்தது. செதிகுல்லா அடல் 45 பந்துகளில், 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 64 ரன்களும், இப்ராகிம் ஸத்ரன் 45 பந்துகளில், ஒரு சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 65 ரன்களும் சேர்த்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் பஹீம் அஸ்ரப் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். 170 ரன்கள் இலக்குடன் பேட் செய்த பாகிஸ்

தான் அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 151 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக ஹாரிஸ் ரவூப் 34, பஹர் ஸமான் 25, கேப்டன் சல்மான் ஆகா 20 ரன்கள் சேர்த்தனர். ஆட்ட நாயகனாக இப்ராகிம் ஸத்ரன் தேர்வானார்.



## கமிந்து மெண்டிஸ் அதிரடியில் இலங்கை வெற்றி

இலங்கை கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான முதல் டி 20 கிரிக்கெட் போட்டி நேற்று ஹராரே நகரில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 175 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக தொடக்க வீரரான பிரையன் பென்னட் 57 பந்துகளில், 12 பவுண்டரிகளுடன் 81 ரன்கள் விளாசினார். சிகந்தர் ராசா 28, ரியான் பர்ல் 17, சீயன் வில்லியம்ஸ் 14 ரன்கள் சேர்த்தனர்.

176 ரன்கள் இலக்குடன் பேட் செய்த இலங்கை அணி 19.1 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 177 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. தொடக்க வீரர்களான பதும் நிசங்கா 32 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 55 ரன்களும், குசால் மெண்டிஸ் 38 பந்துகிளல், 4 பவுண்டரிகளுடன் 38 ரன்களும் சேர்த்தனர். இறுதிப் பகுதியில் கமிந்து மெண்டிஸ் 16 பந்துகளில், 4 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 41 ரன்களும், துஷன் ஹமந்தா 9 பந்துகளிலும் 14 ரன்களும் சேர்த்து அணியின் வெற்றிக்கு உதவினர்.

4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இலங்கை அணி 3 ஆட்டங்கள் கொண்ட டி 20 கிரிக்கெட் தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. 2வது ஆட்டம் வரும் 6ம் தேதி நடைபெறுகிறது.

## யுஎஸ் ஓபன் டென்னிஸ்: அரை இறுதி சுற்றில் அல்கராஸ், ஜோகோவிச்



யுஎஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் கார்லோஸ் அல்கராஸ்,ஜோகோவிச் ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றயைர் பிரிவு கால் இறுதி சுற்றில் 2ம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், 20ம் நிலை வீரரான செக் குடியரசின் ஜிரி லெஹெக்காவுடன் மோதினார். இதில் அல்கராஸ் 6-4, 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறினார்.

7ம் நிலை வீரரும், 4 முறை சாம்பியனுமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 4ம் நிலை வீரரான அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸுடன் மோதினார். இதில் ஜோகோவிச் 6-3, 7-5, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதி சுற்றில் நுழைந்தார். இறுதிப் போட்டியில் நுழைவதற்கான அரை இறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், அல்கராஸுடன் பலப்பரீட்சை நடத்துகிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதி சுற்றில் முதல் நிலை வீராங்கனையும், நடப்பு சாம்பியனுமான பெலாரஸின் அரினா சபலென்கா, தரவரிசையில் 60வது இடத்தில் உள்ள செக் குடியரசின் மார்க்கெட்டா வோண்ட்ரசோவாவுடன் மோதுவதாக இருந்தது. ஆனால் காயம் காரணமாக மார்க்கெட்டா வோண்ட்ரசோவா விலகினார். இதனால் அரினா சபலென்கா அரை இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு கால் இறுதி ஆட்டத்தில் 4ம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, 62ம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் பார்போரா கிரெஜிகோவாவுடன் மோதினார். இதில் ஜெசிகா பெகுலா 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார். அரை இறுதி சுற்றில் ஜெசிகா பெகுலா, அரினா சபலென்காவுடன் பலப்பரீட்சை நடத்துகிறார்.

கால் இறுதியில் யுகி பாம்ப்ரி ஜோடி: ஆடவர் இரட்டையர் பிரிவு 2வது சுற்றில் இந்தியாவின் யுகி பாம்ப்ரி, நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் ஜோடி, போட்டித் தரவரிசையில் 4வது இடத்தில் உள்ள ஜெர்மனியின் கெவின் கிராவிட்ஸ், டிம் பியூட்ஸ் ஜோடியுடன் மோதியது. 1 மணி நேரம் 23 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யுகி பாம்ப்ரி ஜோடி 6-4 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. கிராண்ட் ஸ்லாம் தொடரில் யுகி பாம்ப்ரி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறுவது இதுவே முதன்முறையாகும். கால் இறுதியில் யுகி பாம்ப்ரி ஜோடியானது குரோஷியாவின் நிகோலா மெக்டிக், அமெரிக்காவின் ராஜீப் ராம் ஜோடியுடன் மோதுகிறது.

மாயா தோல்வி: மகளிர் ஜூனியர் ஒற்றையர் பிரிவு 2வது சுற்றில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் ரேவதி, பிரிட்டனின் ஹன்னா க்ளூக்மேனுடன் மோதினார். 2 மணி நேரம் 2 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மாயா 7-6 (7-1) 4-6 3-6 என்ற செட் கணக்கில் போராடி தோல்வி அடைந்தார்.




## சோழிங்கநல்லூர், 193-வது வட்டம்“ துரைப்பாக்கத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்’’

சோழிங்கநல்லூர், செப்.06-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : இடம் : சென்னை மாநகராட்சி 15 மண்டலம், சி. எல்.,மேத்தா கல்லூரி, துரைப்பாக்கம், வார்டு 193( செப்டம்பர் : 03) ‘‘உங்களுடன் ஸ்டாலின் முகாம்‘‘ தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 193 வது வட்டச் செயலாளர், துரைப்பாக்கம்., எ. கே. ஆனந்த் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர். தொடர்ந்து கார்ப்பரேஷன், எ.இ., எஸ். விவேகானந்தர் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, பட்டா, ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத்தொகை எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்று பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம் .எல்.ஏ, பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை வாங்கி துறை சார்ந்த அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் தன்னார்வலர்கள் மனுக்களை பூர்த்தி செய்து கொடுத்தனர். முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டியை எம்.எல்.ஏ வழங் கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ கோயம்புத்தூர் மாவட்டம் திருமலையம் பாளையம் அருள் ராஜ் சுதா ஆகியோர் குமாரன் டாக்டர் ஏ.ஜெயபிரகாஷ், பி.ஹெச்.டி .,திருப்பூர் வட்டம் காங்கயம் வட்டம் காடையூர் ஆண்ட்ரூஸ் டெல்மா ஆகியோர் குமாரத்தி ரெபெக்கா,எம்.எஸ்.சி. ஆகியோர் திருமண நிகழ்ச்சி காங்கயம் சி.எஸ்.ஐ. இயேசு ரட்சகர் ஆலயத்தில் நடைபெற்றது.தொடர்ந்து சி.எஸ்.ஐ. வளாகத்தில் உள்ள பாரீஸ் ஹாலில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மணமகன் குடும்ப நண்பர் கல்வியாளர் டாக்டர் ஜெய்லானி நேரில் கலந்து கொண்டு மணமக்களுக்கு பரிசு வழங்கி வாழ்த்தினார். அப்போது மணமகனின் பெற்றோர் அருள் ராஜ், சுதா, மணமகனின் சகோதரர் ஜெயச்சந்திரன், அவரது துணைவியார் அனிதா ஆகியோர் உடன் இருந்தனர்.



## ராமநாதபுரம் பேராவூர் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய ராஜகோபுர நூதன கும்பாபிஷேக பெரு சாந்தி பெரு விழா

ராமநாதபுரம், செப்.06-

ராமநாதபுரம் பேராவூர் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய ராஜகோபுர நூதன கும்பாபிஷேக பெரு சாந்தி பெரு விழா செப்.1 காலை 9 மணியளவில் மங்கள இசை, மஹா கணபதி, லட்சுமி, நவக்கிரக ஹோமத்துடன் துவங்கியது. அன்று மாலை 6 மணியளவில் அனுக்ஞை, விநாயகர் பூஜை, வாஸ்து பூஜை உள்ளிட்ட பூஜைகளுக்கு பின் காப்பு கட்டு நடந்தது. செப்.2 காலை 8 மணியளவில் 2 ஆம் கால யாக பூஜை, மாலை 6 மணியளவில் சங்கல்பம் 3 ஆம் கால யாக பூஜை, விமான கலசங்கள் பூஜை நடந்தது. செப்.3 காலை 7 மணியளவில் மங்கள இசை, விநாயகர் பூஜை 4 ஆம் கால பூஜை, ஸ்ரீ லட்சுமி சகஸ்ரராம பாராயணம், காலை 11 மணியளவில் 4 ஆம் கால ஆசீர்வாதம், மாலை 6 மணியளவில் 5 ஆம் கால பூஜை, இரவு 9 மணியளவில் 5 சதுர்வேத பாராயணம், தீபாராதனை நடந்தது. இதை தொடர்ந்து செப்.4 காலை 5:30 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, கோ பூஜைக்கு பின் 6 ஆம் கால யாக பூஜை நடந்தது. காலை 9 மணிக்கு கலசங்கள் புறப்பாடாகின. காலை 10:30 மணியளவில் கோபுரக் கலசத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது. இதை தொடர்ந்து அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடந்தன. இதன் பின் பக்ததர்கள் சிதறு தேங்காய் உடைத்து நேர்த்தி செலுத்தினர். இதில் ஏராமான பக்தர்கள் பங்கேற்று அம்மனை தரிசனம் செய்தனர். தொழிலதிபர் வேலு மனோகரன் குடும்பத்தார் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. பேராவூர் மேற்கு கிராம மக்கள் கும்பாபிஷேக ஏற்பாடுகளை வெகு சிறப்பாக செய்தனர்.



## கிழக்கு தாம்பரத்தில் உள்ள சி.எஸ்.ஐ கார்லி மேல் நிலை பள்ளியில் 84, ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள்

தாம்பரம், செப்.06-

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரம் சி.எஸ்.ஐ கார்லி மேல் நிலை பள்ளியில் 84ஆம் ஆண்டு விளையாட்டு போட்டிகள் சி.எஸ்.ஐ சென்னை பேராயர் பேரருட்திரு எ.பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன் அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்றது. இவ்விழாவிற்க்கு பள்ளியின் தாளாளரும் - சென்னை பேராயக் கல்வி அலுவலுமான டாக்டர் வி.ராஜி தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் டாக்டர் டி.நிக்சன் அவர்கள் ஒலிம்பிக் சுடர் ஏற்றி வைத்து வரவேற்ப்புரை ஆற்றினார். இந்த விழாவில் பள்ளி கல்வித்துறை தனியார் பள்ளிகளின் இயக்குனர் டாக்டர் குப்புசாமி சிறப்பு விருந்தினலாக கலந்து கொண்டு மாணவர்களின் அணிவகுப்பு மரியாதை ஏற்று கொண்டு சிறப்பு உரையாற்றினர். இந்த விழாவில் சென்னை பேராயத்தின் அலுவலர்கள், செங்கல்பட்டு மாவட்ட கல்வி அலுவலர்கள், உதவி தலைமை ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், இன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், திரளாக கலந்து கொண்டனர். இந்த விழாவில் மாணவர்களின் கூட்டு பயிற்சி, சிலம்பம், மாணவிகளின் கண்கவரும் பல்வேறு கலச்சார நடனங்கள் மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு புத்தகம், கேடயம், மற்றும் பாராட்டு சான்றிதழ்களை சிறப்பு விருந்தினர் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இவ்விழாவினை பள்ளியின் உடற்கல்வி இயக்குனர் ஜே.டில்லிகிறிஸ்டி மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.



## மேடவாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் வளாகத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்’’

மேடவாக்கம், செப்.06-

சென்னை தெற்கு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலா ளருமான., உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டு தலோடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்., மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் (செப்டம்பர் : 04) ஊராட்சி மன்ற தலைவர் சிவபூஷணம் ரவி தலைமையில் நடைபெற்றது.பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் வழங்கினார்கள். நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் ஊராட்சி மன்ற தலைவர் சிவ பூசணம் ரவி வழங்கினார். உடன் முன்னாள் ஒன்றிய செயலாளர், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர்.,தலைமை பொதுக்குழு உறுப்பினருமான. மேடவாக்கம, ப.ரவி,

மற்றும் வார்டு உறுப்பினர்கள்: ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ், மேடவாக்கம் இளைஞரணி அமைப்பாளர், கே.ராஜேஷ், மேடவாக்கம் இளைஞர் அணி துணை அமைப்பாளர், எம். என் .பி. பாஸ்கர், மேடவாக்கம் இளைஞரணி துணை அமைப்பாளர், எம் .என் .பி.ரமேஷ், தாவுத் நகர் இளைஞரணி அமைப்பாளர், எம். ஆர். ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் நிகழ்வில் கலந்து கொண்டு பொதுமக்கள் குறைகளை தீர்த்து வைத்தனர். மேடவாக்கத்தில் அடுத்த ‘‘உங்களுடன் ஸ்டாலின்’’ முகாம் (செப்டம்பர் : 23ம்) தேதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், கண்காணிப்பு குழுத்தலைவர் / சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி முன்னிலையில் நடைபெற்றது



சிவகங்கை, செப்.06-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் கண்காணிப்பு குழு தலைவர் / சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.கார்த்தி ப சிதம்பரம் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம், வேளாண் மற்றும் விவசாயிகளின் நலன், வேளாண் வணிகம், கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை, குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள், சிறு குறு, நடுத்தர நிறுவனங்கள் மேம்பாடு, நிலம் மற்றும் கனிம வளங்கள், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள், கால்நடை மற்றும் பால்வள மேம்பாடு, மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, 15 வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், பிரதம மந்திரி கிரிஷி விகாஸ் யோஜனா, பசல் பீமா யோஜனா, சின்சாயி யோஜனா, அட்மா திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஜல் ஜீவன் மிஷன், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம், பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா, கேலோ இந்தியா, பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (கிராமம்), தூய்மை பாரத இயக்கம் உள்ளிட்ட திட்ட செயல்பாடுகள் தொடர்பாகவும்,

மேற்கண்டவாறு மத்திய, மாநில அரசின் பல்வேறு துறைகள் ரீதியாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் அதன் பயன்கள், நிதிநிலை, செலவினங்கள் ஆகியன குறித்தும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அரசின் திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாகவும்,

அதனை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவ தற்கென மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியன குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், கண்காணிப்பு குழு தலைவரான சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள், தங்களது துறைகள் ரீதியாக மேற்கொண்ட பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், தேவையான நிதி நிலைகள் ஆகியன தொடர்பாக ஆண்டறிக்கையின்படி, விரிவாக எடுத்துரைத்தனர்.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் மத்திய, மாநில அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து திட்டங்களின் கீழ் அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில், அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சம்பந்தப்பட்ட துறை செயலாளர்கள் வாயிலாக பரிந்துரை செய்து, தேவையான நிதி மற்றும் சலுகைகளை பெற்றுத் தருவதற்கான உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். மக்கள் நலனை கருத்தில் கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் திட்டங்களின் கீழ் உரிய பயன்கள் கிடைக்கப்பெற செய்வதற்கு, அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து முனைப்புடன் செயல்பட வேண்டும் என மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத்தலைவர் / சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் அவர்களால் இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

## அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் மாணவர்களுக்கான பாலின உளவியல் குறித்த கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது




காரைக்குடி, செப்.06-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் நேற்று முன்தினம் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியருக்கான பாலின உளவியல் குறித்த கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி, கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து இந்நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து எடுத்துக் கூறினார். வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம் வரவேற்புரை ஆற்றினார்.

கேரள மாநிலம் கொச்சியில் உள்ள ராஜகிரி சமூக அறிவியல் கல்லூரியின் சமூகப் பணித்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கல்யாணி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ‘‘சமூக ஊடகமும், பாலின சமத்துவமும்‘‘ என்ற தலைப்பில், மாணவ மாணவியரிடையே பாலின உளவியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். சமூக ஊடகங்கள் இன்றைக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன என்றும், அதனால் அதை மிகவும் கவனமாக மாணவர்கள் கையாள வேண்டும் என்றும் எடுத்துக் கூறினார். கல்லூரியின் தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி நன்றி கூறினார். தமிழ் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அனிதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இதில் பேராசிரியர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161